# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 26.10.2021 supeedsam.com supeedsam@gmail.com







# ஆறு அம்ச கோரிக்கையை முன்வைத்து நாடு முழுவதும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற அதிபர் , ஆசிரியர் சங்கங்களின் போராட்டத்தின் போது

(தர்மா)

சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து அதிபர் ஆசிரியர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டங்கள் நேற்று நாடு முழுவதும் இடம்பெற்றன.

ஆசிரியர்களுக்கு இணையம் மூலம் கற்பித்தல் தொடர்பான அனைத்து வசதிகளையும் வழங்க வேண்டும். சகல மாணவர்களுக்கும் இணைய வசதி செய்து கொடுக்க வேண்டும், மாணவர்களின்

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் கவனயீர்ப்பு போராட்டம்

(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மொரவெவ பிரதேசத்திலுள்ள விவசாயிகள் தமது விவசாயத்தினை மேற்கொள்ள அரசாங்கம் உடனடியாக பசளையை வழங்க வேண்டுமாறு கோரி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர.

திருகோணமலை ஹொரவ் பொத்தான பிரதான வீதி பன்குளம் பிள்ளையார் கோயிலுக்கு

02 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் கலப்பட டீசல் விற்பனை செய்வதாக முறைப்பாடு



(திருமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை கண்டி வீதி மட்டிக்களி பிரதேசத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலுடன் மண்ணெண்ணெய் கலந்து டீசல் விற்பனை செய்யப்படுவதாக திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூதூர் பல்நோக்கு கூட்டுறவுச்சங்கத்தினால் கண்காணிக்கப்பட்டு

02 ஆம் பக்கத்தில்...

## தலவாக்கலையில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்



(தலவாக்கலை பி.கேதீஸ்)

சம்பளப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் கோரி ஒன்றிணைந்த அதிபர்,ஆசிரியர்தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் நேற்று (25) பிற்பகல் தலவாக்கலை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், தலவாக்கலை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் பெருமளவிலான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை ஏந்தியவாறு சுமார் ஒரு மணிநேரம் கொவிட் 19 சுகாதார விதிமுறைகளை பின்பற்றியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

## மன்னாரில் தேவையான சேதன பசளையும் இரசாயன பசளையும் இல்லை

### அரசு உடன் கொள்கையை மாற்ற வேண்டும் சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது நெற்செய்கைக்கான நடவடிக்கைக்கான முன்னெடுப்புக்களை விவசாயிகள் மேற்கொள்ளும் இந்நேரத்தில் இங்கு சேதன பசளையும் இல்லை. இரசாயன பசளையும் இல்லை. இங்குள்ள விதை நெல்லானது இரசாயன உரத்துக்கு



பழக்கப்பட்டவை. அத்துடன் சேதன பசளைகளுக்கு ஏற்றவாறு விதை நெல்லை முதலில் அரசு தயார்படுத்தியிருக்க வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

திங்கள் கிழமை மன்னார் மாவட்டத்தின் கமநல சேவைகளின் 174 விவசாய அமைப்புக்கள் ஒன்றிணைந்து

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கு மாகாண ஆளுநராக மௌலவி முபாரக் அப்துல் மஜீதை நியமிக்குமாறு கோரிக்கை

(சுபீட்சம் நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநராக ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீதை நியமிக்குமாறு கட்சியின் பிரதித் தலைவர் கா.மு. மழ்ஹர்தீன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநராக மறுபடியும் முஸ்லிம் அரசியல்வாதி யொருவர் நியமிக்கப்பட உள்ளதக கிழக்கு வாழ் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகின்ற நிலையில்

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் அவர்களை கிழக்கு மாகாண ஆளுநராக நியமனம் செய்யுமாறு குறித்த

02 ஆம் பக்கத்தில்...






## காணாமல் போன வாழைச்சேனை மீனவர்கள் நான்கு வாரங்களுக்கு பின்னர் திரும்பினர்

(குகதர்சன்)

கடலில் காணாமல்போன வாழைச்சேனை கடற்றொழிலாளர்களை மீட்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சி காரணமாக நான்கு வாரங்களின் பின்னர் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## இரவு நேர பயணக் கட்டுப்பாடு நீக்கம்

(காந்தன்)

நாட்டில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள இரவு நேரபயணக் கட்டுப்பாட்டை நீக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## பால்மா வாங்க டோக்கன்!



(எச்.எம்.எம்.பர்ஸான்)

வர்த்தக நிலையங்களில் பால்மாக்களை பெறுவதில் மக்கள் தொடர்ச்சியாக அசௌகரியங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சில இடங்களில் நீண்ட வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்து ஒருவருக்கு ஒரு பால்மா பக்கட்டுக்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

02 ஆம் பக்கத்தில்...











## அசாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்



மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி ஊடகவியாளர் சந்திப்பு ஒன்றில் இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் விதமாக கருத்து தெரிவித்ததையடுத்து.

02 ஆம் பக்கத்தில்...

# இலங்கைத் தமிழர்கள் 65 பேர் தொடர்பில் தமிழக காவல்துறைக்கு இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை

கடந்த செப்டம்பர் மாதத்தில் தமிழகத்தின் அகதிகள் முகாம்களிலிருந்தும் ஏனைய தனியார் குடியிருப்புகளிலிருந்தும் காணாமல் போனதாகக்கூறப்படும் இலங்கைத் தமிழர்கள் 65 பேர் தொடர்பில் தமிழக காவல்துறைக்கு இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் மாலைதீவுக்கு அருகில் உள்ள பகுதியில் ஏதிலிகள் சிலர் கண்டறியப்பட்டதாகத் தகவல்கள் வெளியானபோதும் அது தொடர்பில் தமிழக காவல்துறையினருக்குச் சுயாதீனமாகத் தகவல்கள் எவையும் கிடைக்கவில்லை.

இதேவேளை இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இலங்கை அகதிகள் கடனாவுக்கு செல்லும் நோக்கில் கேரளாவின் கரையிலிருந்து புறப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த அகதிகள், தென்னாப்பிரிக்காவை அடைய இந்தியப் பெருங்கடலைப் படகு ஒன்றின் மூலம் கடந்து சென்றதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. அங்கிருந்து அவர்கள் கனடாவுக்குச் செல்ல திட்டமிட்டிருந்தனர். எனினும் அவர்கள் தொடர்பில் உரிய தகவல்கள் கிடைக்காமையை அடுத்து தமிழக காவல்துறையினர், சர்வதேச காவல்துறையான இன்டா 'போலிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை தமிழகத்தில் உள்ள 108 அகதி முகாம்களில் சுமார் 65ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளதாக தமிழக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.




## காணாமல் போன வாழைச்சேனை மீனவர்கள் நான்கு வாரங்களுக்கு

கடந்த செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து ஏழு நாட்கள் கடலில் மீன்பிடிக்கும் ஏற்பாடுகளுடன் நான்கு கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்றிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, குறித்த நான்கு கடற்றொழிலாளர்களும் இந்திய கடற்படையினரால் அந்தமான் தீவுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த நிலையில், திட்டமிட்டபடி குறித்த கடற்றொழிலாளர்கள் கரை திரும்பாத நிலையில், சம்பந்தப்பட்ட உறவினர்களினால் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் ஊடாக கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

இவ் விடயத்தில் கவனம் செலுத்திய கடற்றொழில் அமைச்சர், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணித்ததுடன், இலங்கை மற்றும் இந்திய கடற் பாதுகாப்பு தரப்பினருக்கும் தகவலை தெரியப்படுத்தி ஒத்துழைப்பினை கோரியிருந்தார்.

இந்தநிலையில், தற்போது நான்கு கடற்றொழிலாளர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

## மன்னாரில் தேவையான சேதன பசளையும் இரசாயன பசளையும் இல்லை

விவசாய சம்மேளனத்தின் தலைமையில் உயிலங்குளம் பகுதியில் இரசாயன உரம் மற்றும் கிருமிநாசினி வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்தினர் இவ் போராட்டத்தில் கலந்து கொண்ட வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இங்கு உரையாற்றுகையில்;

இலங்கையில் தற்பொழுது விவசாயிகள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஜனாதிபதியின் கொள்கையானது சேதன பசளையை பாவித்தே விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டபோது அதற்கான மாற்று வழியை கையாளாது இவ் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் தற்பொழுது நெற்செய்கைக்கான நடவடிக்கைக்கான முன்னெடுப்புக்களை விவசாயிகள் மேற்கொள்ளும் இந்நேரத்தில் இங்கு சேதன பசளையும் இல்லை. இரசாயன பசளையும் இல்லை.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதியின் பிழையான திட்டத்தின் காரணமாக விவசாயிகள் இப்பொழுது வீதியில் இறங்கியுள்ளனர்.

ஜனாதிபதி ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும் எமது விவசாயிகள் அறுபது வருடங்களாக இரசாயன உரத்தை பாவித்தே தங்கள் நெற் செய்கையை மேற்கொண்டு வந்துள்ளனர். இன்று இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் கிழங்காக இருக்கலாம் அல்லது பருப்பாக இருக்கலாம் இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அனைத்து உணவுப் பொருட்களும் இரசாயன உரம் பாவித்தே செய்கைப் பண்ணப்பட்டு வருகின்றது. இவ்வாறு இருக்க நெற்செய்கைக்கு மாத்திரம் இரசாயன பசளையை நிறுத்துவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத கருத்தாகும் என நான் உணர்கின்றேன். இங்குள்ள விதை நெல்லானது இரசாயன உரத்துக்கு பழக்கப்பட்டவை. அத்துடன் சேதன பசளைகளுக்கு எற்றவாறு விதை நெல்லை முதலில் அரசு தயார் படுத்தியிருக்க வேண்டும்.

இவைகள் ஒரு குறுகிய காலத்தில் செய்ய முடியாது இதை அரசானது உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த அரசை சார்ந்த பல அமைச்சர்கள் என்னிடம் தனிப்பட்ட முறையில் இது தொடர்பாக கலந்துரையாடும் போது ஜனாதிபதியின் பிழையான முடிவுகளை பகிர்ந்து கொண்டனர்.

ஜனாதிபதி ஒரு முடிவை எடுத்தால் அவர் அதிலிருந்து பின்வாங்க மாட்டார். இதனால் நாங்கள் அரசாங்க கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன் காரணமாக தங்கள் சொந்த மாவட்டங்களுக்கே போக முடியாது தவிப்பதாக தெரிவிக்கின்றனர்.

விவசாயிகளின் எதிர்ப்பே இதற்கு காரணமாக இருக்கின்றது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே ஜனாதிபதி இந்த திட்டத்தை ஒரு ஆய்வுக்கு உட்படுத்தி இதற்கான முடிவை உடன் மாற்ற வேண்டும்.

அன்மையில் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உரத்திலும் நம்பிக்கை இழந்து திருப்பி அனுப்பப்பட்ட சம்பவமும் உண்டு.

இந்த அரசானது நாளுக்கு நாள் இரவு இரவாக பல பொருட்களின் விலைகளை அதிகரித்து வருகின்றது.

ஜனாதிபதி தெரிவிக்கும் கருத்து அரிசினதும் பருப்பினதும் விலையை நிர்மானிப்பதற்கு தான் ஜனாதிபதியாக வரவில்லையென்று. இது ஒரு வியப்புக்குரியதாக இருக்கின்றது.

ஆகவே இந்த அரசும் ஜனாதிபதியும் உடனடியாக ஆராய்ந்து விவசாயிகளுக்கு விமோசனத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என இவ்வாறு தெரிவித்தார்.

## ஆறு அம்ச கோரிக்கையை முன்வைத்து நாடு முழுவதும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

கல்வி உரிமையை உறுதி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா தொற்று பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுகளின் கற்பித்தல் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகியுள்ள நிலையில், பாடசாலை கற்பித்தல் நடவடிக்கைகள் நிறைவடைந்த கையோடு நண்பகல் 1.30 மணியளவில் இந்த போராட்டத்தில் அதிபர் ஆசிரியர்கள் ஈடுபட்டனர்.

மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் குறித்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சம்பள முரண்பாட்டினை நீக்குதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மட்டக்களப்பிலும் ஆசிரியர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம்,இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்,ஆசிரியர் அதிபர்களின் தொழிற்சங்கம் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்தன.

மட்டக்களப்பு காந்திபூங்காவில் ஒன்றுகூடிய ஆசிரியர்கள்,அதிபர்கள் ஊர்வலமாக சென்று மட்டக்களப்பு மணிக்கூண்டு கோபுரத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர் ஆசிரியர்களின் 24 வருட சம்பள முரண்பாட்டினை நீக்கு,பிள்ளைகளின் கல்வி உரிமையினை உறுதிப்படுத்து, கொத்தலாவல பாதுகாப்பு சட்ட மூலத்தினை கிழித்தெறி, அதிபர்,ஆசிரியர் மாணவர்களுக்கும்,பெற்றோர்களுக்கும் அழுத்தத்தினை கொடுக்காதே உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்த போராட்டத்தில் ஆசிரியர்கள்,அதிபர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டதுடன், பல்வேறு கோசங்களையும் எழுப்பினர்.




# சீனாவிடமிருந்து இலங்கையை மீட்கும் முயற்சியில் இந்தியா

சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள சாய்வு போக்குக்கு மத்தியில், இலங்கையை மீட்க இந்தியா முன்வந்துள்ளதாக இந்திய செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கை அதற்கான வழிகளை சீர் செய்யுமா ? என்று இந்திய செய்தி இணையம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

இலங்கையில் இயற்கை பசளைகளை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை நாட்டின் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக சீனாவில் இருந்து பசளைகளை இறக்குமதி செய்ய இலங்கை அரசாங்கம் முன்வந்தது. எனினும் குறித்த பசளைகளில் மாதிரியில் தொற்று இருப்பதாகக் கூறி, இலங்கையின் அதிகாரிகள் அதனை நிராகரித்திருந்தனர்.

இதனையடுத்து மற்றும் ஒரு பசளைக் கப்பல் இலங்கைக்கு வரவிருந்த நிலையில் அதற்கும் இலங்கை தடை விதித்துள்ளது.

இந்த சூழ்நிலையில் இந்தியாவில் இருந்து நனோ நைட்ரிஜன் உரத்தை இலங்கை இறக்குமதி செய்துள்ளது. அத்துடன் நாட்டுக்கு எரிபொருட்களை கொள்வனவு செய்ய இந்தியாவில் இருந்து இலங்கை கடன் பெறும் முயற்சியை முன்னெடுத்துள்ளது.

இந்தியாவுடன் இலங்கை மேற்கொள்ளும் இந்த முயற்சிகள் சீனாவை எரிச்சலடையச் செய்துள்ளது.

இலங்கையில் உள்ள சீனத்தூதரகம் தமது நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படவிருந்த சேதனப்பசளைகளில் தொற்று இருப்பதாக இலங்கை அதிகாரிகள் தெரிவித்திருந்தமையை மறுத்து அறிக்கை வெளியிட்டமையை இந்த விடயத்தில் இந்திய செய்தி இணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

## அசாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரிகை

மார்ச் 16 ஆம் திகதி குற்றப்புலனாய்வு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்த சர்ச்சைக் கருத்துத் தொடர்பிலேயே அவருக்கு எதிராக சட்டமா அதிபரால் இக்குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த அசாத் சாலி தொடர்பான வழக்கு இன்று மேல் நீதிமன்ற நீதிபதி அமல் குணரத்ன தலைமையில் இடம்பெற்ற சந்தர்ப்பத்திலேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## இரவு நேர பயணக் கட்டுப்பாடு நீக்கம்

அதன்படி, நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, இரவு 11 மணி முதல் காலை 4 மணி வரையில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன. அதேபோல் உணவகங்களின் கொள்ளளவு திறனில் மூன்றில் ஒரு பங்கு நபர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 75 பேருக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

மேலும், திருமண நிகழ்வுகளில் மண்டபத்தின் கொள்ளளவு திறனில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்படாதவாறு 100 பேர் வரை பங்கேற்க முடியும். வெளிப்புற திருமண ஒன்றுகூடல்களில் 150 பேர் வரை பங்கேற்கலாம். எனினும் இங்கு மது பரிமாற்றம் தொடர்ந்தும் தடை செய்யப்பட்டிருக்கும்.

## பால்மா வாங்க டோக்கன்!

பொதுமக்களின் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்ய வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேசங்களிலுள்ள பல நோக்கு கூட்டுறவு சங்கங்களில் மக்களின் நலன்கருதி 400 கிரேம் பால்மா பக்கட் ஒன்று 380 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

பால்மாக்களை பெற்றுக் கொள்ள மக்கள் முண்டியடித்துக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து மக்களை கட்டுப்படுத்தி, பால்மாக்களை இலகுவாக வழங்க ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் முன்கூட்டியே டோக்கன்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாண ஆளுநராக மௌலவி

கட்சியின் பிரதித்தலைவர் கா.மு. மழ்ஹர்தீன் அவர்களால் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றின் மூலமாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவர் குறித்த கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது;

2005ஆம் ஆண்டு முதல் ராஜபக்ச அரசோடு தொடர்ந்தும் இணைந்திருக்கும் ஒரே முஸ்லிம் கட்சி முபாரக் அப்துல் மஜீத் அவர்களின் தலைமையிலான கட்சி என்றும் அனைத்து சவால்களின் பொழுதும் அரசுக்கு உறுதுணையாக அவர் செயற்பட்டவர் என்ற அடிப்படையிலும் கிழக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு மிகவும் தகுதி தகுதியானவர் என்பதால் அவரை அப்பதவிக்கு நியமிக்குமாறு கா.மு. மழ்ஹர்தீன் தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் கிழக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டு இனவாத கெடுபிடிகளால் பதவியை ராஜினாமா செய்த கலாநிதி எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹ் அவர்களின் பெயரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகுதாவுத் அவர்களின் பெயரும் இப்பதவிக்கு ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சமூக வலைதளங்களில் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

## திருமலையில் கவனயீர்ப்பு போராட்டம்

முன்பாக 10.30 மணிக்கு இக்கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பன்குளம் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் நடைபணியாக கமநல சேவைத் திணைக்களத்திற்கு முன்பாக சென்று பதாதைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தினால் 12,500 ரூபாய் வழங்கப் படுவதாகவும் அப்பணத்தை கொண்டு சேதனைப்பசளை தயாரிக்க முடியாது எனவும்,சேதனைப்பசளைக்கான உற்பத்தி காலம் 3 தொடக்கம் 6 மாத காலம் செலவிட வேண்டி வரும் எனவும் இக்கால கட்டத்திற்குள் பெரும் போகம் நிறைவடைந்து விடும் எனவும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர்.

ஆகவே அரசாங்கம் உரிய நேரத்தில் பசளையை தர வேண்டும் எனவும் விவசாயத்திற்கான உரத்தினை வேண்டாம் எனவும் இலவசமாக அல்லது மானிய அடிப்படையில் தர வேண்டாம் எனவும் உரிய நேரத்தில் பசளையினை தமது சொந்த பணத்திற்கு ஆவது தந்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

தற்போது நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட பசளையானது விவசாயிகளுக்கு இறுதிகட்டத்தில் வழங்கப்பட வேண்டிய பசளை எனவும் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளை மொரவெவ பிரதேச விவசாய சங்கங்கள் ஒன்றிணைந்து தங்களுடைய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கமநல சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.மனோகாந்தனிடம் கையளித்தனர்.

## திருமலையில் கலப்பட டீசல் விற்பனை

வரும் இந்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இன்று காலை தனியாருக்கு சொந்தமான டிப்பர் வாகனத்திற்கு டீசல் நிரப்பியுள்ளார் பின்னர் டீசலில் மண்ணெண்ணெய் வாசனை வாதத்தினை அடுத்து குறித்த நபர் கொள்கலன் ஒன்றில் 5லீட்டர் டீசல் பெற்று முகர்ந்து பார்த்தவுடன் மண்ணெண்ணெய் வாசனை வந்ததை அடுத்து எரிபொருள் நிலைய பொறுப்பதிகாரியிடம் இது தொடர்பில் வினவியபோது டீசல் விநியோகத்தினை உடன் நிருத்த்தியுள்ளார்

இது தொடர்பில் சந்தேகம் எட்ப்பட்ட வாகன உரிமையாளர் டீசலுடன் மண்ணெண்ணெய் கலக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸ் அவசர இலக்கத்திட்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து திருகோணமலை தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்தே பெட்ரோல் நிரப்பும் நிலையத்தில் டீசல் பகுப்பாய்வு செய்வதற்காக பொலிசாரினால் பெறப்பட்டத்துடன் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்க்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட இம்முறை உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான வரலாற்று பாடத்திற்கான எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய கையேடுகள் வழங்கி வைக்கப்பட்டன





(கமல்)

எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினால் (எஸ்டா ) பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட இம்முறை உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான வரலாற்று பாடத்திற்கான எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய கையேடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

பட்டிருப்பு கல்வி வலயத்தின் சமூக விஞ்ஞான துறைக்கு பொறுப்பான உதவிக் கல்வி பணிப்பாளர்சுரேஸ்தலைமையில் நடைபெற்ற .இந் நிகழ்வில் பட்டிருப்பு கல்வி வலயத்தின் நிருவாக பிரிவுக்கு பொறுப்பான பிரதிக்கல்வி பணிப்பாளர் திரு எஸ் மகேந்திரகுமார் மற்றும் பட்டிருப்பு கல்வி வலய ஆசிரிய வள நிலைய முகாமையாளர் மதிசுதன்,சமூக விஞ்ஞான பாடத்துறை சார்ந்த ஆசிரிய ஆலோசகர்கள் ,எஸ்டா அமைப்பின் ஸ்தாபகர் வசிகரன், அமைப்பின் ஆலோசகர்கள் உறுப்பினர்கள் பட்டிருப்பு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் வரலாறு பாட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இதற் போது நிறுவனத்தின் ஸ்தாபகரினால் கையேடுகள் அனைத்தும் உத்தியோக பூர்வமாக பிரதி கல்வி பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அனைத்து பாடசாலைளுக்குமான கையேடுகள் பாட ஆசிரியர்களிடம் கையயளிக்கப்பட்டது.

மேற்படி கையேடுகள் கொரணா தாக்கம் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில் இதனால் மாணவர்களின் கல்வியில் ஏற்பட்ட தொய்வு நிலையினை சரி செய்து வரலாற்று பாடத்தில் பேறுபேற்றினை அதிகரிக்கும் நோக்கில் குறித்த கையேடானது தயரிக்கப்பட்டு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரச சேவையில் இருந்து ஓய்வு



(கதிரவன்)

ஆசிரியர் சிவயோகீஸ்வர சர்மா 34 வருட அரச ஆசிரியர் சேவையில் இருந்து 2021.10.26 செவ்வாய்கிழமை ஓய்வு பெறுகிறார்.

2017.10.25 ம் திகதி தொடக்கம் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் சேவையாற்றி வருகின்றார்.

1987.12.14ம் திகதி கணித ஆசிரியர் நியமனம் பெற்று யாழ்/ நடேஸ்வரா கல்லூரியில் சேவையாற்றினார்.

பின்னர் 1992.10.20 முதல் யூனியன் கல்லூரியிலும்,

1996.01.01 தொடக்கம் முல்/ வித்தியானந்தா கல்லூரியிலும்,

1998.03.16ம் திகதி தொடக்கம் 2017.10.24ம் திகதி வரை திரு/சிறி கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் சேவையாற்றினார்.

2021.10.27 தனது 60வது வயதினை பூர்த்தி செய்கிறார்.

# தமிழ் -முஸ்லிம் இனங்களுக்கிடையே பரஸ்பர ஐக்கியம் நல்லுறவை வளர்ப்பதற்கான பாலமாகச் செயற்படவேண்டும்

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

காத்தான்குடி கல்விக் கோட்டத்தின் செயற்பாடுகளுக்கென புதிதாக அமைக்கப்பட்டுள்ள பணிமனை தமிழ் முஸ்லிம் சகோதர இனங்களுக்கிடையே பரஸ்பர ஐக்கியம் மற்றும் நல்லுறவை வளர்ப்பதற்கான பாலமாகச் செயற்படவேண்மென மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தெரிவித்தார்.

இக்கல்விப்பணிமனை அமைந்துள்ள இடம் விசாலமான நிலப்பரப்பைக்கொண்டுள்ளதுடன் போதியளவு வசதிகளையும் உள்ளடக்கியுள்ளது. இதனால் இங்கு நடாத்தப்படுகின்ற கல்வி மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகள் இரு சகோதர சமூகங்களையும் இணைத்ததாக அமையவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மட்டக்களப்பு மத்தி வலயக்கல்விப் பணிமனையின்கீழ் இயங்கும் காத்தான்குடி கோட்டத்திற்கான புதிய கல்வியலுவலகம் திறக்கப்பட்டது.

பிரதேச கல்விப்பணிப்பாளர் எம்எம். கலாவுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலயக்கல்விப்பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அலுவலகத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்தார்.




காத்தான்குடி பிரதேச பள்ளிவாயல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஒத்துழைப்புடன் ஒழுங்கமைக்கப்பட்ட இவ்வலுவலகம் அல் மனார் பாடசாலையின் ஒருபகுதியில் அமைந்துள்ளது.

இந்நிகழ்விற்கு உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்எச்எம் . நஸீர் சமாதானக் கல்வி இணைப்பாளர் எம்ஜிஏ. நாஸர் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் பலரும் சமுகமளித்திருந்தனர்.

அல் மனார் வித்தியாயலத்தில் தரம் 5 வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த முப்பத்தைந்துவருடகால வரலாற்றில் முதலாவதாக தகுதியடைந்த மாணவன், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விப்பணிமனை அமைப்பதற்கு நிதியுதவிவழங்கிய சமூகசேவையாளருக்கும் நினைவுப்பரிசில்கள் வழங்கப்பட்டன. அப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் கையளிக்கப்பட்டன.

வலயக்கல்விப்பணிப்பாளர் உமர் மௌலானா இங்கு தொடர்ந்து பேசுகையில் நான் முதல் தடவையாக இப்பாசாலைக்கு தரிசிப்புச்செய்யும்போது இங்குள்ள வளங்கள் பயன்படுத்தப்படாமலிருப்பதை அவதானித்தேன். இந்நிலையில் தற்போது பிரதேசக் கல்விப் பணிமனை இங்கு திறக்கப்படுவதனால் இப்பிரதேசத்தின் பாடசாலைகள் மாத்திரமின்றி வலயத்திலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பயன்பெறக்கூடிய நிகழ்வுகளை இங்கு நடாத்த முடியுமென எதிர்பார்க்கிறேன்.

குறிப்பாக இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சி மேம்படும் பட்சத்தில் அண்மித்த கிராமங்களிலுள்ள சகோதர இன மாணவர்களும் இப்பாசாலையில் சேரக்கூடிய சந்தர்ப்பம் உருவாகும். அது இப்பிரதேசத்திற்கான சுபீட்சத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை என்றார்.

# நுவரேலியாவில் அதிபர், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்




(தலவாக்கலை பி.கேதீஸ்)

சம்பளப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் கோரி ஒன்றிணைந்த அதிபர்,ஆசிரியர்தொழிற்சங்கக்கூட்டமைப்பினர் நேற்று (25) பிற்பகல் நுவரெலியா நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், நுவரெலியா மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் பெருமளவிலான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை ஏந்தியவாறு நுவரெலியா பிரதான தபாற்கந்தோருக்கு அருகாமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

# வாழைச்சேனை கூட்டுறவுச் சங்கத்தில் பால்மா விநியோகம்: குவிந்த மக்கள்



(ந.குகதர்சன்)

நாட்டில் பால்மா தட்டுப்பாடு மிக நீண்ட காலமாக நிலவி வந்த நிலையில் மக்கள் பாலுக்காக மிகவும் கஷ்ட நிலையினை சந்தித்து வந்தனர்.

அந்த நிலையில் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் அங்கர், ரத்தி பால்மா விநியோகம் செய்யப்படுகின்றது.



இந்நிலையில் வாழைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அங்கர், ரத்தி பால்மா விநியோகம் பொதுமக்கள் பாவனைக்கு மாத்திரம் பால்மா விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக பொது முகாமையாளர் எஸ்.டிலக்சன் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் மக்கள் நலன்கருதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் அங்கர், ரத்தி பால்மா 380 விநியோகம் செய்த நிலையில் மக்களின் வருகை அதிகரித்துக் காணப்பட்டது.

வாழைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு பால்மா கொள்வனவிற்கு வந்த மக்களுக்கு இரண்டு பால்மா பெட்டிகள் வழங்கப்பட்டதாக பொது முகாமையாளர் எஸ்.டிலக்சன் தெரிவித்தார்.


நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59




# முயற்சித்தால் எந்த உயரத்தையும் தொடலாம் என்பதற்கு ஏழ்மையின் விதையில் பிறந்தே நானே உதாரணமாக உள்ளேன்

## தெ.கி.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்





**நூருல் ஹுதா உமர்**

எங்களின் வீட்டுக்கு அருகில் மு.கா வின் தற்போதைய தவிசாளர் முழக்கம் மஜீட் அவர்களின் வீடுள்ளது. அந்த வீட்டுக்கு மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஸ்ரப் அடிக்கடி வருவார்.

நாங்கள் காற்சட்டைகளை போட்டு கொண்டு தெருவில் விளையாடிக்கொண்டிருந்த போது அப்படி ஒருநாள் வந்த முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஸ்ரப் என்னிடம் ஆங்கில நாளிதழை தந்து வாசிக்க கூறினார். நான் பிழையாக வாசித்ததும் என்னை ஆங்கில வகுப்புக்கு சேருமாறு கூறி பிரபல ஆங்கில ஆசிரியர் வை.எல்.எஸ். ஹமீட்டிடம் சேர்த்துவிட்டார். அப்போது ஆங்கிலத்தை வெள்ளையனின் மொழியென எல்லோரும் புறக்கணித்த சூழ்நிலையிலும் எனக்கு ஆங்கிலம் மீது விருப்பம் இருந்தது.

இருந்தாலும் குடும்ப நிலை காரணமாக அந்த வகுப்பை என்னால் தொடர முடியவில்லை. கடுமையாக முயற்சிகள் செய்து பின்நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக்கொண்டேன். ஏழ்மையின் விதையில் பிறந்த நான் இவ்வளவு தூரம் உயரக்காரணம் விடாமுயற்சியும், அர்ப்பணிப்புமே தவிர வேறில்லை. கல்விக்கு ஏழ்மை தடையல்ல. முயற்சித்தால் எந்த உயரத்தையும் தொடலாம் என இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் (கலாநிதி) றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி விளையாட்டரங்கில் வரலாற்றில் ஓர் ஏடு புகழ் மௌலவி ஏ.சி.ஏ. எம். புஹாரி தலைமையில் தென்கிழக்கு பல்கலையின் புதிய உபவேந்தராக தெரிவானமையை பாராட்டி சம்மாந்துறை மண்ணும் மக்களும் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் துணை மருத்துவ கல்வித்துறைகளை ஆரம்பிக்க கேட்கிறார்கள். ஆனால் முன்னாள் இந்திய முதல்குடிமகன் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கூறிய பொன்மொழியை போன்று எனது இலக்கை மருத்துவ பீடத்தை நோக்கி நிர்ணயித்துள்ளேன். அது மாத்திரமின்றி விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத் துறையை அதிகமாக கொண்ட பிரதேசமாக காணப்படும் இந்த பிரதேசத்தில் விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத் துறை தொடர்பிலான கற்கைநெறிகளை உருவாக்கி அந்த துறைகளையும் மேம்படுத்த திட்டமிட்டு அதற்கான திட்ட வரைபுகளையும் நானே முன்னின்று செய்துவருகிறேன்.

பல்கலைக்கழக சூழலையும், சமூகத்தையும் ஒன்றித்து கொண்டு செல்ல எதிர்காலத்தில் பல்வேறு திட்டமிடல்களை செய்ய உள்ளேன். வர்த்தகர்கள், விவசாயிகள், மீனவர்கள் போன்ற பலரும் பல்கலைக்கழகமூடாக நிறைய அறிவை வளர்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்க எண்ணியுள்ளேன். இனவாதம், பிரதேசவாதம் இல்லாத ஒருவனாக நான் எப்போதும் இருந்துள்ளேன். முரண்பாடுகள் இல்லாத பல்கலைக்கழக சூழலை உருவாக்கி மேலும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டுசெல்வேன். அதற்கு சகலருடைய ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துள்ளேன் என்றார்..

# மடத்தடி மீனாட்சி அம்மனாலய தலைவராக தவிசாளர் ஜெயசிறில் தெரிவு





**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்றுப்பிரசித்திபெற்ற மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் புதிய தலைவராக பிரபல சமுகசேவையாளரும், காரைதீவு பிரதேசசபைத்தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவு செய்யப்பட்டார்.

அவசர ஆலய பரிபாலனசபைக்கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீனாட்சிஅம்மன் சந்நிதானத்தில் ,பரிபாலன சபைச்செயலாளர் கே.சண்முகம் தலைமையில் நடைபெற்றபோது இத்தெரிவு ஏகமனமதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த 10வருடங்களாக ஆலயத் தலைவராக இருந்துவந்த கோ.கமலநாதன் கடந்த வியாழனன்று(20) காலமானதையடுத்து,புதிய தலைவரைத் தற்காலிகமாகத் தெரிவுசெய்யும் கூட்டம் இடம்பெற்றது.

முன்னதாக இறைபதமடைந்த தலைவர் கோ.கமலநாதனின் மறைவையிட்டு 2நிமிடநேரம் மௌன ஆத்மாஞ்சலி நடாத்தப்பட்டது. அனைவரும் எழுந்துநின்று அவருக்கான அஞ்சலியைச்செலுத்தினர்.

ஆலய போசகர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட ஆலயபரிபாலனசபையின் நிருவாகசபை உறுப்பினர்கள் தத்தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

பல நூற்றாண்டு பழைமை வாய்ந்த பழம்பெரும் மடத்தடி மீனாட்சிஅம்மன் ஆலயத்தின் புதிய ஆலய கும்பாபிசேகத்தையொட்டிய ஆலயபுனருத்தாபனப் பணிகள் பற்றி கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

கும்பாபிசேகத்தை அடுத்தவருட முற்பகுதியில் சிறப்பாக நடாத்த வேண்டிய பணிகள்அனைத்தையும் தற்போதிருந்தே மேற்கொள்வது என்று தீர்மானமாகியது. ஆலய உப தலைவராகவிருந்து பணியாற்றிய தவிசாளர் கி.ஜெயசிறில் வருடாந்தபொதுக்கூட்டம் வரையில் தற்காலிக தலைவராக தெரிவுசெய்யப்பட்டதையிட்டு பலரும் வாழ்த்துக்களைக்கூறினர்.

# கல்முனையில் மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கல் சிறப்பாக முன்னெடுப்பு

**(எம்.எஸ்.எஸ்.ஸாகிர்)**

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையில் மாணவர்களுக்கான கொவிட் - 19 பைஸர் தடுப்பூசி செலுத்தும் பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. தரம் 12 மற்றும் 13 இல் கல்வி கற்கும் மாணவர்களும் இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதவிருக்கின்ற மாணவர்களும் இரண்டாவது முறை பாடசாலையின் மூலம் உயர்தரப் பரீட்சை எழுத இருக்கின்ற மாணவர்களுமாக சுமார் 500 மாணவர்கள் இத்தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டனர்.இந்நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி. சுகுணன், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி யூ.எல்.எம். நியாஸ், கல்லூரியின் அதிபர் எம்.ஐ. ஜாபீர் மற்றும் சுகாதார பரிசோதகர்கள், ஆசிரியர்கள் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை கல்முனை மஹ்மூத் மகளிர் பாடசாலையிலும் கொவிட் - 19 தடுப்பூசி வழங்கப்பட்டது. இதில் தரம் 12 மற்றும் 13 இல் கல்வி பயிலும் மாணவிகளும் உயர்தரப்பரீட்சை எழுத இருக்கின்ற மாணவிகளும் என இத் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.





# தலவாக்கலை பிரதேசத்திலும் மாணவர்களின் வருகை அதிகரிப்பு





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

கொவிட் 19 கொரோனா தொற்று பரவல் காரணமாக மூடப்பட்டிருந்த அரச பாடசாலைகள் நேற்றை தினம் திறக்கப்பட்டன.

நேற்றையதினம் அனைத்து பாடசாலைகளிலும் உள்ள ஆரம்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. தலவாக்கலை பிரதேச படசாலைகளில் மாணவர்கள் கொவிட் 19 சுகாரார வழிகாட்டல்களுக்கு அமைவாக பாடசாலைகளுக்கு வருகைத் தந்தனர்.

நேற்றையதினம் ஆசிரியர்களின் மாணவர்களின் வருகை வழமைப்போன்று காணப்பட்டதுடன் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

# வவுணதீவு பொலிஸ் பிரிவில் ஆர்.பி.ஜி ஆயுதம் மீட்பு



**(வவுணதீவு நிருபர்)**

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பன்சேனை கிராமத்தில் வயல் பகுதியில் இருந்து ஆர்.பி.ஜி லோஞ்சர் ஆயுதம் ஒன்று திங்கட்கிழமை (25) மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த RPG ஆயுதமானது வேளாண்மை பயிர்ச்செய்கைக்காக வயல் நிலங்களை பண்படுத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அகப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிராம மக்களின் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் ஆயுதத்தை மீட்டு வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு குறித்த ஆயுதத்தினை (RPG) எடுத்துச் சென்றுள்ளனர்.

இவ் ஆயுதம் கடந்த யுத்த காலத்தில் கைவிடப்பட்டு சென்றிருக்கலாம் என தெரியவருகின்றது

குறித்த ஆயுதம்(RPG) தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காயத்ரி சித்தர் ஸ்ரீ முருகேசு சுவாமியின் 88 ஆவது குரு ஜயந்தி விழா இன்று

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நுவரெலியா ஸ்ரீ இலங்கா தீஸ்வரர் ஆலய காயத்ரி பீடத்தின் ஸ்தாபகர் காயத்ரி சித்தர் ஸ்ரீ முருகேசு சுவாமியின் 88 ஆவது குரு ஜயந்தி விழா பூஜைகள் இன்று (26) செவ்வாய்கிழமை காயத்ரி பீடத்தில் மிகவும் பக்திபூர்வமாக இலங்கை சுகாதார திணைக்களத்தின் கொவிட் 19 அறிவுருத்தலுக்கு அமைவாக நடைபெறும்.

காயத்ரி பீடத்தில் காலை முதல் விஷேட அபிஷேக அலங்கார பூஜைகள், குரு நல்லாசி பிராத்தனை, காயத்ரி பூஜை, மகா மிருத்யுஞ்ஜெய ஓமம், தியானம், அருளுபதேசம் மற்றும் பஜனை என்பன நடைபெறும்.இதனை தொடர்ந்து நன்பகல் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவ் விசேட பூஜை நிகழ்வுகளில் கலந்துக்கொண்டு சற்குரு தேவரின் பரிபூரண அருளை பெற்றுய்யுமாறு ஸ்ரீ இலங்காதீஸ்வரர் காயத்ரி பீடத்தின் அரங்காவளர் சக்திவேல் சந்திரமோகன் கேட்டுக்கொள்கின்றார்.

# ஆறு மாதங்களின் பின்னர் பாடசாலைகள் ஆரம்பம் மட்டு.மாவட்டத்தில் பாடசாலைகள் திறக்கப்பட்டன





**(ரீ.எல்.ஜவ்பர்கான்)**

சுமார் ஆறு மாதங்களின் ஆரம்ப வகுப்பு பாடசாலைகள் திறக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு வரையான பாடசாலைகள் திறக்கப்பட்டன.மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி பாடசாலைகளுக்கு வருகை தந்தனர்..

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 50 பாடசாலைகள் திறக்கப்பட்டதாக வலய கல்வி பணிப்பாள திருமதி சுஜாதா குலேந்திரன் தெரிவித்தார்

70 சதவீத்திற்கும் அதிகமான மாணவர்கள் சமுகம் தந்திந்ததாக பாடசாலைகளின அதிபார்கள் தெரிவித்தனர்.

மாணவர்கள் மணீகவும் ஆர்வத்துடன் பாடசாலைகளுக்கு வருகை தந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

# ஆறு மாதங்களின் பின் ஆரம்ப பிரிவு பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்



கிழக்கு மாகாணத்தில் ஜானதிபதியின் சிறப்பான கொரான செயல் திட்டம் காரணமாக கல்வியமைச்சினால்சுமார் ஆறு மாதங்களின் ஆரம்ப வகுப்பு பாடசாலைகள் நேற்று திறக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு வரையான பாடசாலைகள் திறக்க ப்பட்டன.மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி பாடசாலை களுக்கு வருகை தந்தனர்..மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 61 பாடசாலைகள் திறக்கப்பட்டதாக வலய கல்வி பணிப்பாள தெரிவித்தார்80 சதவீத்திற்கும் அதிகமான மாணவர்கள் சமுகம் தந்திந்ததாக பாடசாலைகளின அதிபார்கள் தெரிவித்தனர்.மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைகளுக்கு வருகை தந்திருந்ததை அவதானிக்க முடிந்தது

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று ஐந்து கல்வி வலயங்களிலும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள நிலையில் மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைகளுக்கு சமூகமளித்ததை அவதானிக்க முடிந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின்கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சகல பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளும் இன்று ஆரம்பிக்கப்பட்டன.மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களிலும் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகள் இன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இன்றைய தினம் பெருமளவு மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளித்திருந்தையும் பெற்றோர் ஆர்வத்துடன் பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துவருவதையும் காணமுடிந்தது.பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஆசிரியர்கள்,அதிபர்கள் இன்றைய தினம் பாடசாலைகளுக்க சமூகமளித்திருந்தனர்.சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகபேணப்பட்டு இன்றைய தினம் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள்ஆரம்பிக்கப் பட்டுள்ளன.







சுழிபுரம் கிழக்கு சாத்தாவோலை பணிப்புலம் சபரிபீட ஐயப்பன் கோவில் புதிதாகக்கட்டப்பட்டு கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரதம குரு சிவாகம கிரியாபூஷணம் சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்களின் தலைமையில் நடைபெற்றது.

# விமர்சிக்கும் யாருக்கும் அஞ்சப்போவதில்லை விரைவில் எமது திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறும்

## சாய்ந்தமருது கூட்டுறவு சங்கத் தலைவர் உதுமாலெப்பை



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்கம் தன்னுடைய 50வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 28 ஆம் திகதி புதிய விற்பனை நிலையமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்க நிர்வாகத்தலைவர் எம்.எம். உதுமாலெப்பை தெரிவித்தார்.

சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவு சங்க அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர்சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 2016 ஆகஸ்டில் புதிய நிர்வாகம் இந்த மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பல நோக்கு கூட்டுறவு சங்கத்தை பொறுப்பேற்ற போது மிகவும் வறுமையானசங்கத்தை போன்று குடிநீர், மின்சாரம், தொலைபேசி வசதிகள், போதிய வசதிகளில்லாத கட்டிடம் போன்ற எவ்வித அடிப்படை வசதிகளுமில்லாமல் இருந்தது. இதனை கவனத்தில் எடுத்து உடனடியாக அந்த வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தோம்.

நிர்வாக முன்னெடுப்புக்களை சிறப்பாக செய்ய முன்னாள் அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவருமான றிசாத் பதியுதீன் முன்னாள், அரச வர்த்தக கூட்டுத்தாபன தலைவராக இருந்த கலாநிதி ஏ.எம். ஜெமீல், கடந்த நல்லாட்சி காலப்பகுதியில் ஐ.தே. கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மாரசிங்க ஆகியோர் சங்கத்தின் மேம்பாட்டுக்காக உதவினார்கள். நாட்டில் ஒரு அசாதாரண நிலை ஏற்படும் போது முன்னின்று மக்கள் பணி செய்வதிலும் மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பல நோக்கு கூட்டுறவு சங்கம் எப்போதும் பின்நின்றதில்லை. இந்த நிர்வாகத்தினரால் கூட அண்மையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா அலையின் தாக்கத்தினால் பயணத்தடை அமுலான போது பாதிக்கப்பட்ட வசதி குறைந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் செய்தமையையும், சாய்ந்தமருதிலிருந்து பல்வேறு சாதனைகள் படைக்கும் சாதனையாளர்களை கௌரவிப்பதிலும் முன்னின்று செயற்பட்டவர்கள் நாங்கள். மக்களின் பிரச்சினைகளினதும், தேவைகளினதும் போது நாங்கள் எப்போதும் எதிர்காலத்தை நோக்கி சிந்தித்து செயற்திட்டங்களை முன்வைத்து வருகிறோம்.

எங்களின் அபிவிருத்தி திட்டங்கள், முதலீட்டு நடவடிக்கைகளை எதிர்த்து வெளியாகும் சமூக வலைத்தள விமர்சனங்களுக்கும், பதிவுகளுக்கும் பதிலளிப்பதில் எப்போதும் நாங்கள் முன்வரப் போவதில்லை. யாருக்கும் நாங்கள் அஞ்சவும் மாட்டோம். எதிர்வரும் காலங்களில் இந்த சங்கத்தின் வருமானத்தை கூட்ட கோப் டீ நிலையத்தை சாய்ந்தமருது பிரதான வீதியில் அமைக்க பணிப்பாளர் சபையினர் திட்டமிட்டுளோம்.

எதிர்வரும் 28 ஆம் திகதி கோலாகலமாக திறக்க ஆயத்தமாக உள்ளோம். முன்னாள் பிரதேச செயலாளராக இருந்த இப்போதைய இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் ஏ.எல்.எம். சலீம் அவர்களினால் சாய்ந்தமருது கடற்கரை வீதியில் மட்டுப்படுத்தப்பட்ட சாய்ந்தமருது பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட 25 பேர்ச் காணியில் மீனவர்களின் நன்மை கருதி எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றையும், ஐஸ் தொழிற்சாலையையும் நிறுவ திட்டங்களை தயார்படுத்தி வருவதாகவும் இந்த பணியை வெற்றிகரமாக முன்னெடுக்க சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையிலான சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகளும் குறிப்பாக காணி விடயங்களுக்கு பொறுப்பான அதிகாரியும் ஒத்துழைப்புக்களை தொடர்ந்தும் வழங்கி வருவதாக சங்கத்தின் தலைவர் எம்.எம். உதுமாலெப்பை மேலும் தெரிவித்தார்.



பண்டத்தரிப்பு கலட்டி பணிப்புலம் ஸ்ரீ ஹிஹரசுதன் ஐயப்ப தேவஸ்தான நூதன ஆலய பஞ்சகுண்டபஷ பிரதிஷ்டா கும்பாபிஷேகம் பணிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தர்மகர்த்தாவும் பிரதமகுருவுமாகிய சிவாகம சாதகபூஷணம் சிவஸ்ரீ பேரின்ப. இன்பராஜக் குருக்கள் தலைமையில் எதிர் வரும் புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு மற்றும் பால்க் காப்பு சாத்தமுடியும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவிக்கின்றனர்.

# மலையகத்தில் பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்





(க.கிஷாந்தன்)

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் ஆரம்ப பிரிவுகளில் கற்பித்தல் நடவடிக்கை ஆரம்பமானது.

தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உற்சாகமாக பாடசாலைகளுக்கு வருகை தந்தனர்.

மலையக பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள், கடந்த இரு நாட்களாக பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களால் சுத்தம் செய்யப்பட்டன. சில பாடசாலைகள் இன்று காலையே சுத்தம் செய்யப்படுவதை காணமுடிந்தது.

சுமார் 100 நாட்களுக்கு மேலாக தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அதிபர், ஆசிரியர்களும் இன்று பாடசாலைகளுக்கு சமூகமளித்திருந்தனர். சில பாடசாலைகளில் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் வருகை குறைவாகவே காணப்பட்டது.

முகக்கவசம் அணிதல், கை கழுதுவல், சமூகஇடைவெளி உட்பட சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு மாணவர்களுக்கு பாடசாலை நுழைவாயிலில் வைத்தே தெளிவுபடுத்தப்படுவதுடன், மாணவர்களுக்கு நோய் அறிகுறிகள் இருந்தால் அவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பல்கலைக்கழகங்கள் சமூகத்துடன் ஒன்றித்து சென்று சமூக பிரச்சினைகளையும் பேச வேண்டும்

## சம்மாந்துறை தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாத்

(நூருல் ஹுதா உமர்)



ஒலுவிலில் அமைந்துள்ள இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் முஸ்லிங்களுக்கு மட்டுமான பல்கலைக்கழகமல்ல. அது போன்றே ஏனைய பல்கலைக்கழகங்களும் ஒரு தனி இனங்களுக்கான பல்கலைக்கழகமல்ல. தென்கிழக்கு பல்கலைக்கழகம் அமைந்துள்ள இந்த பிரதேசங்களில் இனமுரண்பாடுகள் அதிகமாக உள்ளது. அதிலும் சம்மாந்துறையில் சற்று அதிகமாக உள்ளது.

அப்படியாயின் பல்கலைக்கழகம் தன்னுடைய சமூக பொறுப்பிலிருந்து வெளியேறியுள்ளதா என்று சிந்திக்க தோன்றுகிறது. அங்கிருந்து பல்வேறு ஆய்வுகள் வெளியாகிக் கொண்டிருந்தாலும் பல நூறு வருட வரலாற்றை கொண்ட முஸ்லிங்களின் காணி, பூர்விகம், பொருளாதாரம், பௌதிக வரலாறு என எதுவும் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை என்பது உருவாகி 25 வருட காலத்தை கொண்ட தென்கிழக்கு பல்கலைக்கழகம் தவற விட்ட ஒரு குறையாகவே பார்க்கிறேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேசசபை தவிசாளருமான ஏ.எம்.எம். நௌசாத் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி விளையாட்டரங்கில் வரலாற்றில் ஓர் ஏடு புகழ் மௌலவி ஏ.சி.ஏ. எம். புஹாரி தலைமையில் தென்கிழக்கு பல்கலையின் புதிய உபவேந்தரை சம்மாந்துறை மண்ணும் மக்களும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,

முஸ்லிம் சமூகத்தை பற்றிய சர்ச்சைகளுக்கும், விமர்சனங்களுக்கும் உலமாக்களோ அல்லது அரசியல்வாதிகளோ விளக்கம் கூற முன்னர் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அது பற்றிய தெளிவை சக பெரும்பான்மை இன மாணவர்களுக்கு விளக்க முன்வரவேண்டும். இப்படியான சூழ்நிலையை தென்கிழக்கு பல்கலைக்கழக கல்விச்சமூகம் செய்ய முன்வர வேண்டும். இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை மாணவர்களே உருவாக்க வல்லவர்கள். இப்படியான நிலையொன்றை புதிய உபவேந்தர் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அவருடைய கல்வித்தராதரம், பட்டங்கள், ஆய்வுகள் என்பன அது தொடர்பிலையே அமைந்துள்ளது.

சமூக மாற்றங்களை கல்விமான்கள், புத்திஜீவிகள் நிறைந்த பல்கலைக்கழகங்களே உருவாக்க வேண்டும். இப்போதைய காலகட்டங்களில் பல்கலைக்கழகங்களுக்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பு குறைவாகவே காணப்படுகிறது. தென்கிழக்கு பல்கலைக்கழகம் எங்கள் பிரதேசத்தில் அமைந்துள்ள சமூக நல கல்விக்கூடம் என்று பெருமைப்படும் நிலை எதிர்காலத்தில் உருவாகவேண்டும். இவற்றையெல்லாம் சாத்தியப்படுத்தும் திறமையும், தகுதியும் புதிய உபவேந்தருக்கு இருக்கிறது என்ற நம்பிக்கையில் அவரை சிபாரிசு செய்துள்ளேன். அர்ப்பணிப்பு, கடின முயற்சியே அவரை இந்த இடத்திற்கு கொண்டுவந்துள்ளது. மேலும் தானும் வளர்ந்து தன்னுடைய சமூகத்தையும் வளர்க்க என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன் என்றார்.


நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK
துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


Restaurant
GRÜNAU
ITALY INDIAN THAI SRILANKA
Meier-Wiesen Str. 58
8064 Zürich
PIZZA NACH WAHL, TANDOORI, FISCH SPL.
BBQ GRILL, BIRIYANI SPL.,CURRY GERICHTE,
PARTYSERVICE.
Bestellung Number
044 260 2222
079 563 2222
www.restaurant-grunau.ch
info@restaurant-grunau.ch
Uber Eats
TWINT

# MATHE BILDUNGSZENTRUM

# கணித கற்கைநெறி மையம்

MBZ

**கல்வியே துணை**

பள்ளித் தலைமனைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

**Mathe மகேந்திரா**-வின் தெளிவான
கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

**Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung**
**BMS, HMS, FMS, Gymi Probe**

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

**Oerlikon, Uster, Schaffhausen**